BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

E - ISSN: 3139 -1893 An international open access, peer- reviewed, refereed journal

# கண்ணகி முதல் இன்றைய கைம்பெண்கள் வரை: சமூகச் சவால்களும் அரசின் பொறுப்பும்

முனைவர். பாரதி சிவசங்கரி

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, கலை மற்றும் அறிவியல் புலம், தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகம், சமயபுரம், தமிழ்நாடு, இந்தியா, ORCID ID - 0000-0003-1760-9325 Vidwan - 706148

**ஆய்வுச் சுருக்கம்**

இவ்வாய்வு, சிலப்பதிகாரத்தின் தலைமை மாந்தரான கண்ணகியை கைம்பெண்மையின் இலக்கியக் குறியீடாகக் கொண்டு, தமிழ்ச் சமூகத்தில் கைம்பெண்களின் நிலை வரலாற்று வளர்ச்சியில் எவ்வாறு மாறியுள்ளது என்பதை ஆராய்கிறது. சங்ககாலச் சமூகத்தில் பெண்கள் கல்வி, பொருளாதாரம் மற்றும் சமூக வாழ்வில் ஒப்பீட்டளவில் சுதந்திரமான நிலையைப் பெற்றிருந்தனர் என்பதையும், பின்னாளில் சமூக மரபுகள் மற்றும் கட்டுப்பாடுகள் காரணமாக கைம்பெண்களின் நிலை எவ்வாறு பாதிக்கப்பட்டது என்பதையும் இவ்வாய்வு விளக்குகிறது. குறிப்பாக, இன்றைய கைம்பெண்கள் எதிர்கொள்ளும் சமூக ஒதுக்கல், பொருளாதாரப் பாதுகாப்பின்மை, மறுமணத் தடைகள், உளவியல் பாதிப்புகள் மற்றும் பாலினப் பாகுபாடுகள் போன்ற சவால்கள் விரிவாக ஆராயப்படுகின்றன.

மேலும், தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் விதவை ஓய்வூதியத் திட்டம், சுயதொழில் உதவித் திட்டங்கள், கல்வி மற்றும் மறுவாழ்வு சார்ந்த நலத்திட்டங்கள் ஆகியவற்றின் பங்களிப்பு மதிப்பிடப்படுகிறது. அதேவேளையில், கைம்பெண்களுக்கான வேலைவாய்ப்பு மேம்பாடு, தொழில்முனைவு ஊக்குவிப்பு, மனநல ஆலோசனை மையங்கள், மறுமண ஊக்கத்திட்டங்கள் மற்றும் சமூக விழிப்புணர்வு நடவடிக்கைகள் போன்ற துறைகளில் அரசு மேலும் கவனம் செலுத்த வேண்டிய தேவையையும் இவ்வாய்வு எடுத்துரைக்கிறது.

**முக்கியச் சொற்கள்:** கண்ணகி, கைம்பெண்மை, சிலப்பதிகாரம், சங்ககாலப் பெண்கள், சமூகச் சவால்கள், தமிழ்நாடு அரசு நலத்திட்டங்கள், பெண்கள் உரிமைகள்.

## முன்னுரை

ஜூன் 23 ஆம் தேதி உலக கைம்பெண் தினமாக அனுசரிக்கப்படுகிறது. இந்த தினம் கைம்பெண்களின் வலியைப் பற்றிய விழிப்புணர்வை உலகின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டும் என்கிற நோக்கில் ஆசரிக்கப்படுகிறது. ஆனால் இது வெற்று தின அனுசரிப்பாக மட்டுமின்றி- பெண்களின் வாழ்க்கைநிலையில் உள்ள மாற்றத்திற்கான சமூகச் செயல்பாட்டுக் களமாக மாற வேண்டும்.

இந்தியாவில் கைம்பெண்மை வாழ்க்கை முறை என்பது வரலாறு, சமூகம் மற்றும் சட்டப் பிரச்சினைகள் ஆகிய மூன்று பரிமாணங்களில் பிணைப்பட்டுள்ளது. இலக்கியத்தில் கண்ணகியின் உருவம் முதல் இன்றைய கிராமப்புறங்களில் கைம்பெண்கள் எதிர்கொள்ளும் நிலை வரை இந்த ஆய்வுத் தளம் அமைகிறது. இலக்கியச் சான்றுகள், அரசு திட்டங்கள், சமூகச் சவால்கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து முழுமையான பார்வையில் இந்த ஆய்வு நிறைகிறது. சங்ககாலம் முதல் இன்று வரை பெண்களின் சமுதாய நிலை பல்வேறு மாற்றங்களைச் சந்தித்துள்ளது. ஆயினும் கைம்பெண்களின் நிலையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏதும் நிகழவில்லை என்பதே இன்றும் உள்ள கேள்வியாக நிற்கிறது.

**1. கண்ணகி - இலக்கியத்தில் கைம்பெண்மையின் குறியீடு**

முத்தமிழ்க் காப்பியம் என்று பிறப்பிக்கப்படும் சிலப்பதிகாரத்தில் கண்ணகி வெறும் ஒரு கைம்பெண் மட்டுமன்று- அவள் அந்த சமூகத்தின் அட்டகாசத்தினை எதிர்த்து நின்ற தீரமிக்கப் பெண். அவள் கோவலனை இழந்ததும், கைம்பெண்மை எய்தியதும் அன்றைய சமூகம் அவளை ஒதுக்கவில்லை - மாறாக அவளுடைய வலியையும் உள்ளத்தாபத்தினையும் முடியாத உறுதியில் நிலை நிறுத்தி சமுதாயத்தை தன் விசாரணை நிலைக்குள் கொண்டுவந்தாள்.

தொல்காப்பியம் பெண்பால் நெறிகளில், 'கைம்பெண்' உரிமைகளில் சில கடுமையான நெறிகளை வலியுறுத்தியிருந்தாலும்,

*"செறிவும் நிறைவும் செம்மையுஞ் செப்பும்*
*அறிவும் அருமையும் பெண்பா லான"*
*(தொல்காப்பியம், பொருளியல், நூற்பா-206)*

என்று பெண்ணின் சுதந்திரத்தையும் அறிவையும் அங்கீகரித்து உயர்த்தியுள்ளது. காஞ்சித்திணை பற்றி தொல்காப்பியர் கூறுமிடத்து கைம்பெண் நிலையினை 'தாபத நிலை' - 'துறவற நிலை' என்றே குறிப்பிடுகின்றார்.

*"தனி மகள் புலம்பிய முதுபாலையும்*
*.........................................*
*காதலி இழந்த தபுதார நிலையும்*
*காதலன் இழந்த தாபத நிலையும்*
*நல்லோள் கணவனொடு நளிஅழல் புகீஇச்"*
*(தொல்காப்பியம், புறத்திணையியல், 19)*

கைம்மை நோன்பு சமுதாயச் சடங்காக அங்கீகரிக்கப்பட்டாலும் கூட அன்றைய அன்பின் ஐந்திணையில் பாலைத் திணை உள்ளடக்கமாகவே இதனை வரையறை செய்கின்றனர். எனவே அன்பின் மிகுதியில் அவை கடைபிடிக்கப்பட்டது என்பதே இங்கு பொருத்தமாக அமையும்.

சமய பூசல் நிறைந்த காலத்திலும் வைதீகச் சமயத்தினை முன்னிலைப் படுத்திட விரும்பிய இளங்கோவடிகள், சிலப்பதிகாரத்தில் மாதவியின் கைம்மை நிலையினை,

*"போதி-மாதவர் புத்த துறவிகள் முன்னிலையில்*
*தன் பொருள்களைத் தானம் செய்துவிட்டு*
*மாதவி துறவு பூண்டதைக் கேட்டாயா, தோழி.''*
*(சிலப்பதிகாரம், வஞ்சிக் காண்டம்,*
*வாழ்த்துக் காதை)*

என்று துறவறத்திலேயே நிறைவு செய்கிறார். கண்ணகி கணவனைப் பிரிந்த நிலையினைக் கூறுமிடத்து,

*"அஞ்செஞ் சீறடி அணிசிலம் பொழிய*
*செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்ப*
*பவள வாள்நுதல் திலகம் இழப்ப*
*மையிருங் கூந்தல் நெய்யணி மறப்பக்*
*கையறு நெஞ்சத்துக் கண்ணகி"*
*(சிலம்பு, புகார்க்காண்டம், அந்திமாலைச் சிறப்புச் செய் காதை)*

என்று குறிப்பிடுகின்றார். ஆனால் கோவலன் இறந்த பிறகு கண்ணகியை கூந்தலை விரித்துப் போட்ட வண்ணமே சித்தரிக்கிறார். எவ்விடத்திலும் மயிர் மழித்தலைப் பற்றியோ, அணிகலன் இழத்தல் போன்ற சடங்குகளையோ இளங்கோ குறிப்பிடவில்லை. போராட்ட குணம் நிறைந்த பெண்ணாக, நேர்மையின் பொருட்டு யாருக்கும் அஞ்சாத நெஞ்சத்தவளாகவே காட்சி படுத்துகிறார், என்கையில் கண்ணகியின் விருப்பத்திற்கு மாறாக கூந்தல் மழித்தலை இளங்கோ சுட்ட வில்லை என்பதே காணக்கிடைக்கிறது.

**2. வரலாற்றில் கைம்பெண்களின் நிலை**

**2.1 சங்க காலக் கைம்பெண்கள்**

சங்ககாலம் முதல் இன்று வரை பெண்களின் சமுதாய நிலை பல்வேறு மாற்றங்களைச் சந்தித்துள்ளது. ஆயினும் கூட கைம்பெண்களின் நிலை என்பதில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏதும் நிகழவில்லை என்பதே இங்கு குற்றச்சாட்டாக உள்ளது.

சங்க இலக்கியங்களில் திருமணம் என்பதே களவு வாழ்க்கையாக இருந்த காரணத்தினால், கைம்பெண் ஒருவர் மறுமணம் செய்ததாகவும் சொத்துரிமை பெற்றதாகவும் சான்றுகளைக் காட்டிட இயலாது. ஆனால் பெண்கள் சுதந்திரமாக செயல்பட்டுள்ளனர் என்பது அவர்களின் திருமணம் களவில் துவங்கி கற்பில் முடிவதன் அடிப்படையில் காணக்கிடைக்கிறது.

களவின் பொழுது நடைபெறும் இற்செறிப்பு தவிர பெண்களுக்கும் கடுமையான கட்டுப்பாடுகள் எதுவுமில்லை என்று சங்க இலக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன.

*"வாழைப் பூவின் வளைமுறி சிதற"*

*(புறம்., 237:10-12)*

*"தொடிகழி மகளிரின் தொல்கவின் வாடி"*

*(புறம்., 238: 5-7)*

என்று கைம்பெண் வளையல் கழட்டுதல் பற்றியும்,

*"பூ வாட் கோவலர் பூவுடன் உதிரக்*
*கொய்து கட்டுஅழித்த வேங்கையின்*
*மெல்லியல் மகளிரும் இழை களைந்தனரே"*

*(புறம்., 224:15-17)*

என்று கைம்பெண் அணி களைதல் குறித்தும்,

*"மெய்ம் மறந்து பட்ட வரையாப் பூசல்*
*ஒள்நுதல் மகளிர் கைம்மைகூர*
*அவிர் அறல் கடுக்கும் அம்மென்*
*குவை இருங் கூந்தல் கொய்தல் கண்டே"*

*(புறம்.25:10-14)*

என்று கைம்பெண் கூந்தல் களைதல் குறித்தும் புறநானூறு வருந்திக் கூறுகின்றது. இன்றும் இந்நிலை சடங்கு என்னும் பெயரில் தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது. சங்ககாலத்தில் கைம்மை நோன்பு என்பது கூந்தல் மழித்தல், அணிகலன் துறத்தல், உணவுக்கட்டுப்பாடு, கற்படுக்கை என்று பல்வேறு செயல்பாடுகளுடன் இருந்ததாக சங்கப் பாடல் வரிகளின் வழி அறியலாம். ஆயினும் இக்கருத்து எந்த அளவிற்கு அக்கால வாழ்வியல் உண்மை தழுவியது என்பது ஆய்வாளர்கள் மத்தியில் கேள்விக்குறியே.

பெண்கள் தலைவனைப்(காதலன்/கணவன்) பிரிந்து தனிமையில் உள்ளபோது மயிர் நல்லன செய்தல் இல்லை; அணிகலன் பூட்டி தங்களை ஒப்பனைகள் செய்து கொள்வதில்லை என்பதனை கண்ணகி வழி வழி அறிகிறோம். எனினும்,

*"ஒள்நுதல் மகளிர் கைம்மை கூர, அவிர் அறல் கடுக்கும் அம் மென்குவை இருங்கூந்தல் கொய்தல் கண்டே"*

*(கல்லாடனார், புறநானூறு, 25)*

என்ற கல்லாடனாரின் வரிகள் சங்கப் பெண்களின் கைம்மை நிலையில் கூந்தல் மழித்தல் என்பது அடையாளமாகக் காட்டப்படுகின்றது.

*"வறுங்குரற் கூந்தல்" (புறம், 147)*

*"நெய்யொடு துறந்த மையிருங் கூந்தல்"*

*(புறம், 147:5-9)*

இவ்வாறு சங்கப்பாடல்களில் பல இடங்களில் பெண்களின் தனிமைத்துயர் எடுத்துரைக்கப் பட்டுள்ளது. அவ்விடங்களில் தலைவனைப் பிரிந்த சங்ககால மகளிர் தலை முடியினை பராமரிப்பதில்லை என்பதனை இவ்வரிகள் சுட்டுகின்றன. என்றால் தலைவன் இறந்த பிறகு அவர்கள் கூந்தலை மழிப்பது என்பதும் அவர்களின் விருப்பத்திற்கு உட்பட்டே நடந்துள்ளது என்றே இதனைக் கருத இடமளிக்கிறது.

### 2.2. மனப்போராட்டத்தின் மறுபரிணாமம்

#### 2.2.1 தீப்பாய்தல் —

தீப்பாய்தல் நிலை என்பது சங்ககால வழக்கில் கைம்பெண் நிலையில் பேரன் பின் உச்ச நிலையில் நிகழும் மனப்போராட்டத்தின் மறுபரிணாமாகவே காணப்படுகின்றது.

*"பெருந்தோள் கணவன் மாய்ந்தென*
*அரும்புஅற வள்இதழ் அவிழ்ந்த தாமரை*
*நள்இரும் பொய்கையும், தீயும் ஒரற்றே!*

*(புறநானூறு - 246)*

இவ்வாறு தாமரையும் தீயும் ஒன்றே என்று ஒரு பெண் கூறுகின்றாள் எனில் இது யாருடைய தூண்டுதலும் இன்றி தன் மன உணர்வின் அடிப்படையில் எடுத்த முடிவாகவே உள்ளது.

#### 2.1.2 ஈமத்தாழி இறங்கல்

*"கலம் செய் கோவே! கலம் செய் கோவே!"*

*(புறம், 256)*

என்னும் வரிகளில் கணவனை இழந்து இந்தச் சமூகத்தில் தனிமையில் வாழ்வதைவிட இருப்பதே மேல் என்று ஒரு பெண் அவள் கணவருடனேயே ஈமத்தாழியில் தானும் அமர்ந்து கொள்ள விரும்பி அதற்கு தக்கவாறு கலம் செய்யச் சொல்கிறாள். இது புறநானூற்றுச் செய்தி மட்டும் இல்லை. ஒரு பெண் இச்சமுதாய கைம்பெண் சடங்கு முறைகளாலும், சமுதாய புறக்கணிப்பினாலும் எந்த அளவிற்கு பாதிக்கப்பட்டு இம்முடிவை எடுத்திருப்பாள். எனில் சங்ககாலச் சமுதாயத்தில் இல்லற பெண்களுக்கு உயர்வும் மதிப்பும் கொடுக்கப்பட்டு இருப்பினும் கைம்பெண் எனும் இடத்தில் அவர்கள் பாதிக்கப்பட்டு உள்ளனர் என்பது தெளிகின்றது.

கணவனின் இறப்புக்காகப் போராடி மதுரையை எரித்த கண்ணகியும் கூட இதற்கு விதிவிலக்கில்லை. இது சமுதாய நிர்பந்தமா? அல்லது கணவன் மீது கொண்ட அதீத அன்பா என்கையில் பேரன்பு என்பதே தீர்வாகக் கிடைக்கப் பெறுகின்றது.




### 3. மத்திய காலம்- கடுமையான கட்டுப்பாட்டுக் காலம்கள்

மத்திய காலத்தில் சாதி மற்றும் மத நெறிகளின் பெயரில் கைம்பெண்கள் அதிக அளவில் ஒடுக்கப்பட்டார்கள். சங்க காலத்தில் அன்பின் காரணமாக பெண்கள் செய்த செயல்கள் அனைத்தும் இக்காலத்தில் கட்டாயக் கட்டுப்பாடுகளாக மாறின. பெண்ணடிமை என்பது மேலோங்கிய காலமாகவே மத்திய காலம் இருந்துள்ளது. 'சதி - உடன்கட்டை ஏறுதல்' வழக்கம் இக்காலத்தில் கடுமையாக நிலவியது.

- பெண்ணின் வாழ்க்கை கணவன் இறந்தவுடன் முடிவடைந்தது என்கிற கொடுமையான நடப்பை சமூகம் உருவாக்கியது.
- பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டது
- பெண்கள் பொதுவெளியில் செல்ல தடை விதிக்கப்பட்டது
- ஆணாதிக்க மனநிலை மேலோங்கியது
- பொருளாதார நிலையில் பெண்களை மிகவும் கீழான நிலையில் வைத்திருந்தது அச்சமூக அமைப்பு
- இடைக்காலத்தில் சமயப் போட்டியின் காரணமாக சடங்குகளுக்கு அதிகம் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அது மக்களிடையே பழக்கமாகவும் வழக்கமாகவும் மாறியது. இன்றும் சில சமயச் சமூகங்களில் மொட்டையடித்தல், வெள்ளுடை தரித்தல், அணிகலன் தவிர்த்தல் போன்றவை கடைப்பிடிக்கப்படுகின்றன.

### 3.1காலனி காலம் - சீர்திருத்தத்தின் வழி

1829-ஆம் ஆண்டு ராஜாராம் மோகன் ராயின் முயற்சியால் சதி ஒழிப்புச் சட்டம் இயற்றப்பட்டது. 1856-ஆம் ஆண்டு பெண்களின் உணர்விற்கு மதிப்பளித்து இந்து விதவை மறுமணச் சட்டம் இயற்றப்பட்டது. தமிழகத்தில் பெரியார் பெண் சுதந்திரம், மறுமணம் ஆகியவற்றுக்காக உரத்த குரல் எடுத்தார். ஆனால் சட்ட மாற்றம் சமூக மனமாற்றமாக மாறவில்லை.

### 3.2 பெண்விடுதலை இயக்கம்

ஐரோப்பியர் வருகைக்குப் பிறகு இங்கு பெண்விடுதலை என்பது பேரெழுச்சி கண்டது. பாரதியார் 'தர்மயுத்தம்' என்னும் தலைப்பில் உலகெங்கும் நடக்கும் பெண்ணுரிமை இயக்கங்களை தமிழ்நாட்டுப் பெண்களுக்கு அறிமுகப்படுத்தினார்: அதன் தொடர்ச்சியாக, 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பெண்களுக்கான வாக்குரிமை, கல்வி மற்றும் சொத்துரிமைக்காகப் போராடினார்கள். 1960-களுக்குப் பிறகு குடும்ப வன்முறைக்கு எதிரான சட்டங்கள், பெண்களின் உடல்நலம் மற்றும் இனப்பெருக்க உரிமைகள் மீது கவனம் செலுத்தப்பட்டது.

### 4. இன்றைய கைம்பெண்கள் எதிர்கொள்ளும் சமூகச் சவால்கள்

### 4.1 புள்ளிவிவர உண்மை

(India, 2011), இந்தியாவில் சுமார் 4.3 கோடி கைம்பெண்கள் உள்ளனர். 60 வயதுக்கு மேற்பட்ட பெண்களில் 48 சதவீதம் பேர் கைம்பெண்களாக உள்ளனர் — ஆனால் அதே வயதில் ஆண்களில் வெறும் 16 சதவீதம் மட்டுமே விதவராக உள்ளனர். இந்த ஏற்றதாழ்வே சமூகத்தின் இரட்டை நிலைப்பாட்டை அம்பலப்படுத்துகிறது.

### 4.2 சமூக ஒதுக்கல் மற்றும் அசுப முத்திரை

பாரம்பரிய நம்பிக்கைகள் கைம்பெண்களை 'அசுபமானவர்கள்' என்று முத்திரை குத்துகின்றன. மத நிகழ்வுகளிலிருந்தும் சமூக விழாக்களிலிருந்தும் ஒதுக்கப்படுகிறார்கள். வெள்ளை உடை அணியக் கட்டாயப்படுத்துதல், நகை நீக்கம், விழாக்களில் தடை ஆகியவற்றை இன்னும் தமிழகத்தின் சில கிராமப்புறங்களில் காணமுடிகிறது. கைம்பெண்ணின் கவனிக்கப்படாத நிலை என்பது இன்றும் தொடர்கிறது. கிராமப்புறங்களில் இது அதிகமாகவே நீடிக்கிறது.

### 4.3 சொத்துரிமை மறுப்பு

கணவரின் சொத்திலிருந்து கைம்பெண்கள் விலக்கப்படுவது இன்னும் நடைமுறையில் உள்ளது. பொருளாதார இழப்பு மட்டுமன்று — அது அவர்களை சமூகரீதியாக முழுமையாக சார்புநிலைக்குத் தள்ளுகிறது. (மதராஸ் உயர் நீதிமன்றத் தீர்ப்பு - இந்து வாரிசுரிமைச் சட்டம், 2024): இந்து வாரிசுரிமைச் சட்டம் மறுமணத்திற்குப் பிறகும் கைம்பெண்களின் சொத்துரிமையை தானாகவே நீக்கவில்லை. ஆனால் இந்த சட்ட விளக்கம் கிராமப்புறங்களுக்கு இன்னும் எட்டவில்லை.

### 4.4 நீதிக்காகப் போராடும் இன்றைய கண்ணகிகள்

இன்றைய கைம்பெண்களும் கண்ணகியைப்போல் நீதி கேட்டு நிற்கின்றனர். ஆனாலும் அந்த நீதி கண்ணகிக்குக் கிடைத்தது போன்று அத்தனை எளிதாக கிடைத்துவிடுவதில்லை. உதாரணமாக, சாதிய ஆணவக் கொலையால் (Honour killing) தமிழகத்தில் பெரிதும் அறியப்பட்டவர் கௌசல்யா சங்கர். உடுமலைப்பேட்டையில் பட்டியலின இளைஞரான சங்கரை சாதி மறுப்புத் திருமணம் செய்ததற்காக, 2016-ஆம் ஆண்டு மார்ச் 13-ஆம் தேதி கௌசல்யாவின் குடும்பத்தினரே கூலிப்படையை ஏவி அவரைக் கொடூரமாகக் கொலை செய்தனர். 2017-ஆம் ஆண்டு திருப்பூர் நீதிமன்றம் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை அளித்தது; எனினும் 2020-ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்றம் முக்கியக் குற்றவாளியான தந்தையின் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்தது. (Minute, 2017)

### 4.5 மறுமணத் தடை மற்றும் மனநல பாதிப்பு

சட்டம் மறுமணத்திற்கு அனுமதி அளித்தாலும், குழந்தைகள் இருந்தால் மாமியார் வீட்டினர் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். 'முன்னேறுவது' என்று தீர்மானிக்கும் கைம்பெண்கள் கடுமையான சமூக விமர்சனத்திற்கு உள்ளாகின்றார்கள் - விதவர்களுக்கு இத்தகைய தண்டனை இல்லை. இந்து விதவைகள் மறுமணச் சட்டம், 1856 பிரிவு XV என்பது 25 சூலை 1856 அன்று இந்தியாவில் இந்து விதவைகளின் மறுமணத்தைச் சட்டச் செல்லுபடியாக்கியது. என்றாலும், சமுதாயம் அதனை இன்று வரை ஏதோ பெருங்குற்றமாகவே பார்க்கிறது.மேலும், இந்த மனரீதியான நெருக்கடி ஆய்வுகளில் போதுமான இடம் பெறவில்லை என்பதும் கவலைக்குரியது.

**சவால்களின் சுருக்க அட்டவணை**

| சவால் | இலக்கிய வேர் | இன்றைய நிலை |
|---|---|---|
| சமூக ஒதுக்கல் | சிலப்பதிகாரம் | விழாக்களில் தடை |
| சொத்துரிமை மறுப்பு | மனுதர்மம் | நீதிமன்றம் திருத்தியும் நடைமுறை மாறவில்லை |
| மறுமண தடை | பண்டைய சம்பிரதாயம் | கிராமப்புறத்தில் இன்னும் நீடிகிறது |
| மனநல பாதிப்பு | ஈமத்தாழி இறங்கல், நெருப்பில் இறங்குதல் | ஆய்வில் புறக்கணிக்கப்பட்டது |

## 5. அரசின் திட்டங்கள் - உள்ளதும் இல்லாததும்

### 5.1 மத்திய அரசு திட்டம் - IGNWPS

இந்திரா காந்தி தேசிய விதவை ஓய்வூதியத் திட்டம் (IGNWPS) 2009-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இத்திட்டம் தேசிய சமூக உதவித் திட்டத்தின் (NSAP) கீழ் செயல்படுகிறது.

40 வயதிற்கு மேற்பட்ட வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள கைம்பெண்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. மேலும் பொங்கல் மற்றும் தீபாவளியில் இலவச சேலையையும், மாதத்திற்கு இலவச அரிசியும் வழங்கப்படுகின்றன.

### 5.2 தமிழ்நாடு அரசு திட்டம்

தமிழ்நாடு அரசு ஆதரவற்ற விதவை உதவித்தொகை திட்டத்தை (Destitute Widow Pension Scheme) 1975-ஆம் ஆண்டு கொண்டுவந்தது. இந்த சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் தகுதியான விதவை பெண்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. மாநில மகளிர் கொள்கை 2024-ஆம் ஆண்டு பிப்ரவரியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் வெளியிடப்பட்டது — இதில் கைம்பெண்களின் நலனும் கவனிக்கப்பட்டுள்ளது.

### 5.3 சட்ட ஏற்பாடுகள்

1856-ஆம் ஆண்டு இந்து விதவை மறுமணச் சட்டம், 1954-ஆம் ஆண்டு சிறப்பு மணச் சட்டம் - இச்சட்டங்கள் மறுமணம், சொத்துரிமை ஆகிய உரிமைகளை சட்டரீதியாக உறுதிப்படுத்தின. ஆனால் சட்டம் இருந்தாலும் சமூகத்தின் மனமாற்றம் இந்த வேகத்தில் நிகழவில்லை என்பது கவலைப்படத்தக்க உண்மை.

### 5.4 இடைவெளிகள் - திட்டங்கள் அனைவரையும் சென்றடையாத காரணங்கள்

- ஆவணமின்மை மற்றும் வருமானச் சான்று இல்லாமல் திட்டத்திற்கு தகுதி பெறமுடியாமல் போவது.
- விழிப்புணர்வின்மை - கீழ்த்தள அளவில் திட்டங்கள் பற்றிய தகவல் இல்லாதவர்கள் அதிகம்.
- ஓய்வூதியத் தொகை ரூ.1,000 மட்டுமே - இன்றைய வாழ்க்கைச் சூழலில் பொருளாதார தேவைகளுக்கு போதுமானதல்ல.
- மறுமணம் செய்தால் ஓய்வூதியம் நிறுத்தப்படும் என்ற கொள்கை மறுமணத்தைத் தடுக்கிறது.
- அரசு ஊழியர்களுக்கு லஞ்சம் கொடுத்தல், இணைய சேவைகளில் சிக்கல்கள் என்று நீடிக்கும் சிக்கல்கள்.

இந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் இன்றும் சில சிக்கல்கள் நீடிக்கின்றன. மக்களுக்கு விழிப்புணர்வின்மையும், அரசிடம் போதிய ஆவணமின்மையுமே இதற்கு முக்கிய காரணமாக உள்ளது.

## 6. சமூக மாற்றப் பரிந்துரைகள்

- ஓய்வூதியத் தொகை உயர்த்தப்பட வேண்டும் - குறைந்தபட்சம் ரூ.3,000 ஆகவாவது உயர்த்தப்பட வேண்டும்
- கிளைத்தள விழிப்புணர்வு இயக்கம் உடனடியாக வெளியிடப்பட வேண்டும்
- சுயஉதவிக்குழு அடிப்படையில் பொருளாதார சுதந்திரம் வழங்கப்பட வேண்டும்
- மனநல மறுமலர்ச்சி மையங்கள் கிளைத்தளத்தில் தொடங்கப்பட வேண்டும்
- கைம்பெண்களை 'அமங்கலம்' என்று கருதும் சமூக மனோபாவத்திற்கு எதிராக விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடத்தப்பட வேண்டும்.
- சொத்துரிமை சட்டங்கள் கிராமப்புற அளவில் செயல்படுத்தப்பட வேண்டும்.
- வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மூலம் திட்டங்கள் நேரடியாக பயனாளிகளை சென்றடைய வேண்டும்.
- பள்ளி, கல்லூரி பாடத்திட்டங்களில் பாலின சமத்துவம் பற்றிய கல்வி இணைக்கப்பட வேண்டும்.
- பெண் என்பவள் வெறும் உடல் அல்ல என்பதை ஆண் பிள்ளைகளுக்கு கல்வி வாயிலாக படிப்பிக்க வேண்டும்.

### முடிவுரை

கண்ணகி கோவலனை இழந்த நிமிடம் சமூகம் அவளை எவ்வாறு நோக்கியது என்பதை இளங்கோ அடிகள் நுட்பமாக சித்தரிக்கிறார். கணவனை இழந்த பெண் - சமூகத்தில் தனிமையாக்கப்பட்ட உருவமாக மாறுகிறாள். இந்த நிலை இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்தும் மாறவில்லை, என்பதே இன்றைய கசப்பான உண்மை.

இன்று கைம்பெண் தினம் வெறும் ஒரு நினைவு நாளாக இருக்கக் கூடாது — அது சாதியும் சமூக ஒடுக்குமுறையும் மலிந்த பெண்களுக்கு நீதி வழங்கும் செயல்நாளாக மாற வேண்டும். இலக்கியம் கண்ணகியின் வலியை பதிவு செய்வது மட்டுமல்லாமல்; இன்றைய சமூகம் அந்த வலிக்கு தடுப்பு வைக்க வேண்டும்.

“கண்ணகி அழுதாள்; இன்றும் அழுகிறாள் - ஆனால் இன்றைய கண்ணகி மடங்கி நில்லாமல் எழுந்து நிற்கிறாள்” - ஆய்வாளர் மூலம்.

சமூகமும் அரசும் இணைந்து செயலாற்ற வேண்டும். கடுமையான சட்டங்கள், முழுமையான திட்டங்கள், சமூக விழிப்புணர்வு ஆகிய மூன்று தளங்களிலும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்போதே கைம்பெண்களின் வாழ்க்கை மாறும். கைம்பெண் தினம் ஆண்டுதோறும் ஒரு நினைவு நாளாக மட்டும் அனுசரிக்கப்படாமல், அடுத்த ஆண்டிற்கான செயல்திட்டங்களை வகுக்கும் நாளாக மாற வேண்டும்.

**உசாத்துணை நூல்கள்**

**இலக்கிய சான்றுளுக்காக**


1. இளம்பூரணனார்(உரை) தொல்காப்பியம் பொருளதிகாரம், தமிழ்மண் பதிப்பகம், சென்னை, 2003
2. தட்சிணாமூர்த்தி, அ., தமிழர் நாகரிகமும் பண்பாடும், செல்வி வெளியீடு,சென்னை, 2011
3. புறநானூறு மூலமும் பழைய உரையும், டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, 1971
4. வேங்கடசாமி நாட்டார், நாவலர் ந. மு., ஐம்பெருங்காப்பியங்கள் - சிலப்பதிகாரம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2004


**அரசு ஆவணங்கள்**


- தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை 2024, பிப்ரவரி 21, 2024
- Indira Gandhi National Widow Pension Scheme (IGNWPS), Ministry of Rural Development, Govt. of India, 2009
- மதராஸ் உயர் நீதிமன்றத் தீர்ப்பு, டிசம்பர் 2024 — இந்து வாரிசுரிமைச் சட்டம்
- தமிழ்நாடு அரசு ஆதரவற்ற விதவை உதவித்தொகை திட்டம் (Destitute Widow Pension Scheme), 1975


**ஆய்வு இதழ் சான்றுகள்**


- Sarojinee Sahoo, "Widow Representation in India: A Caste-Based Analysis," Society and Culture Development in India, Vol. 4, No. 2, 2024, pp. 349–362
- "Widowhood and its Associated Vulnerabilities in India: A Gendered Perspective," The India Forum, July 31, 2024
- Prof. Priyanka Kanitkar, "Indian Widows: Challenges Faced by Them and Government Schemes," Zenodo, 2022
- Census of India 2011, Office of the Registrar General & Census Commissioner, India
- The News Minute, "Kausalya Case Verdict," Published: December 12, 2017